| முதல் திருப்புதல் தேர்வு - 2025 | | தேர்வு எண் |
|---|---|---|
| காலம் : 3-00 மணி | பத்தாம் வகுப்பு - தமிழ் | மதிப்பெண் : 100 |

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (15x1=15)

2) ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
   அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும்
   இ) தாளும், ஓலையும் ஈ) சருகும், சண்டும்
2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"- பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
   இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
3. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல்
   அ) மணிமேகலை ஆ) காசிக்காண்டம்
   இ) மலைபடுகடாம் ஈ) சிலப்பதிகாரம்
4. "குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்
   பூனையார் பால் சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
   ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ) பால்வழுவமைதி, திணை வழுவமைதி
   ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி
5. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது"? என்ற வினாவுக்கு "இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது
   அ) ஐயவினா, சுட்டுவிடை ஆ) அறியா வினா, சுட்டுவிடை
   இ) அறிவினா, மறைவிடை ஈ) அறியாவினா, இனமொழி விடை
6. கார்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   ஆ) முல்லை, மருதம், நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
   ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
7. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி கருதியது ________
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
8. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்
   அ) இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
   ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகந்தால் இறந்துவிடாது என் மனம்
   ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல்
   ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
10. 'செம்மை சான்ற காவிதி மாக்கள்' என்று அமைச்சர்களை போற்றுபவர் யார்?
    அ) ஊன் பொதிப் பசுங்குடையார் ஆ) ஏணிச்சேரி முடமோசியார்
    இ) மாங்குடி மருதனார் ஈ) ஆவூர் மூலங்கிழார்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. கானடை என்பதை பிரித்தால் பொருந்தாத தொடரைத் தேர்க
அ) கான் அடை - காட்டைச் சேர்
ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
இ) கால் நடை - காலால் நடத்தல்
ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12, 13, 14, 15)**

*விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கருவளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்*

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) முல்லைப்பாட்டு ஆ) நற்றிணை இ) மலைபடுகடாம் ஈ) பரிபாடல்
13. இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் ஆ) பெருங்கௌசிகனார் இ) ஔவையார் ஈ) கம்பர்
14. விசும்பு என்ற சொல்லின் பொருள்
அ) யுகம் ஆ) சிறப்பு இ) வானம் ஈ) முறை
15. ஊழ் ஊழ் இலக்கணக்குறிப்பு யாது?
அ) இரட்டைக்கிளவி ஆ) அடுக்குத்தொடர்
இ) உரிச்சொல் தொடர் ஈ) வேற்றுமைத்தொடர்

## பகுதி -2 (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

***குறிப்பு: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.***
***வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** ***(4x2=8)***

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. ***விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.***
அ) இளம் வயதிலேயே கலைஞர் 'மாணவ நேசன்' என்னும் கையெழுத்து ஏட்டை நடத்தினார்
ஆ) செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்
18. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" -
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
19. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.
20. திரைப்படமான ஜெயகாந்தன் படைப்புகளுள் ஏதேனும் நான்கு கூறுக.
21. 'அருமை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

***குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*** ***(5x2=10)***

*22.* ***கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.***
உழவர்கள் மலையில் உழுதனர்
முல்லைப் பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
23. "மயங்கிய" - *பகுபத உறுப்பிலக்கணம் தருக.*
*24.* ***இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***
அ) சிலை - சீலை ஆ) மடு - மாடு
25. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.
*26.* ***கலைச்சொல் தருக.***
அ) Nanotechnology ஆ) Aesthetics


Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. மரபுத் தொடரைப் பொருத்தமான தொடரில் அமைத்து எழுதுக.
அ) கண்ணும் கருத்தும் ஆ) அள்ளி இறைத்தல்

28. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**பகுதி – III (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு சுருக்கமாக விடையளிக்க.*** ***(2x3=6)***

29. சோலைப்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.

***30. பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.***
மொழிப்பெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியல் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டரைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிற மொழிக் கருத்துக்களை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.
அ) தொல்காப்பியர் மொழிபெயர்த்தல் பற்றி கூறிய இயல் எது?
ஆ) சின்னமனூர்ச் செப்பேடு மொழிபெயர்ப்பு பற்றி கூறிய செய்தி யாது?
இ) வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட நூல்கள் யாவை?

31. 'தலையைத் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்'- இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு – 2**

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.***
***(வினா எண் 34க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)*** ***(2x3=6)***

32. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

***34. அடிபிறழாமல் எழுதுக.***
அ) 'வாளால் ' ..... எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.
***(அல்லது)***
ஆ) 'வெய்யோனொளி' ... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

**பிரிவு – 3** ***(2x3=6)***

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.***

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

37. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து - ***இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.***

**பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)**

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.*** ***(5x5=25)***

38. அ) முல்லைப் பாட்டிலுள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
***(அல்லது)***
ஆ) பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

39. அ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுது அடைந்த சாலைகளை சீரமைத்தும், மின்கம்பங்களைச் சரி செய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்கு கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்ற தாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

***40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***



41. வீட்டு எண்: 18 குறிஞ்சி நகர், கரூர் என்ற முகவரியில் வசித்து வரும் சிவக்குமாரின் மகன் சசிக்குமார் கரூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பினை நிறைவு செய்திருக்கிறார். இவர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராக சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை சசிக்குமாராகக் கருதி கொடுக்கப்பட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக. *(அல்லது)*

ஆ) ***மொழிபெயர்க்க.***

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fill the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.*** ***(3x8=24)***

43. அ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக் கலைஞர் - இயற்றமிழ்க் கலைஞர் - ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. *(அல்லது)*

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனித நேயத்தை சுவைபட விளக்கி எழுதுக. *(அல்லது)*

ஆ) அன்னமய்யா என்ற பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

***45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.***

அ) முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை. *(அல்லது)*

ஆ) முன்னுரை - விசும்பின் துளியும் பசும்புல் தலையும் - காற்றுமாசு - பசுமையைக் காப்போம் - மரம் நமக்கு வரம் - நில மாசு - மழைநீர் உயிர்நீர் - நீர்மாசு - முடிவுரை இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'இயற்கையைக் காப்போம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com